72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 26 May 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya


# அ கு திஸாநாயக்கவின் ஆதரவு 45%ற்கு சரிகிறது, ஆனால் தொடர்ந்து சஜித் பிரேமதாசவைவிட(37%) முன்னணியில் உள்ளார்.

*IHP ஏப்ரல் 2023 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

IHPன் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மான MRP தொடரியின் ஏப்ரல் கருத்துக்கணிப்பின்படி, என்.பி.பி./ஜே.வி.பி. யின் தலைவர் அ கு திஸநாயகவிற்கு வாக்களிக்ககூடியவர்களுக்கு இடையே அவருக்கான ஆதரவு 45%ற்கு சரிந்தது, எனினும் 37% உடைய எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவைவிட முன்னிலையில் உள்ளார். அ கு திஸநாயகவின் ஆதரவில் சரிவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெரிதும் பயனடைந்தார். அவர் 3 புள்ளிகள் அதிகமாக பெற்று 13% ற்கு உயர்ந்தார் மற்றும் பொதுவான எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் 1 புள்ளி அதிகமாக பெற்று 6%ற்கு சென்றார். மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-4%.

**ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், ஏப்ரல் 2023 (அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)**

இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால், நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஏப்ர. 2023 இல் நடத்தப்பட்ட 580 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ். 31 2021- மே. 19 2023 வரை நடத்தப்பட்ட 11,368 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மதிப்பீடுகளிற்கான பிழை விளிம்பு 1-4% என்று மதிப்பிடப்பட்டது. முதலில் எஸ்.எல்.பி.பி. என்பது “ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ” வை குறிப்பிட்டது, ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் பொதுவான எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் பற்றி கேட்கப்படுகிறார்கள்.


ஏப்ரலில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆதரவில் கிடைத்த உயர்வு, எமது SLOTS பொதுத் தேர்தல் வாக்களிப்பு தீர்மாணம் கருத்துக்கணிப்பில் யூ.என்.பி.க்கான ஆதரவில் அதிகரிப்பு மற்றும் நுகர்வோர் நம்பிக்கையில் சமீபத்திய முன்னேற்றங்கள் ஆகியவற்றுடன் ஒத்துப்போகின்றது. சமீபத்திய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மற்றும் சில பொருளாதார குறிகாட்டிகளில் ஸ்திரப்படுத்தல் ஆகியவை ஜனாதிபதி மற்றும் அவரது கட்சிக்கான ஆதரவு அதிகரிக்க மட்டுமே வழிவகுத்தன, எஸ்.எல்.பி.பி. க்கு அல்ல என்பதற்கு அவை மேலும் ஆதாரங்களாக அமைகின்றன.

**IHP SLOTS ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் தொடரி (அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)**

இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால், நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஆகஸ். 31 2021- மே. 19 2023 வரை நடத்தப்பட்ட 11,368 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மாதாந்திர மதிப்பீடுகள். MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மாதம் மற்றும் கட்சியைப் பொருத்து மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-7% என்று மதிப்பிடப்பட்டது. முதலில் எஸ்.எல்.பி.பி. என்பது “ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ”வைக் குறிப்பிட்டது. ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் “கோடாபய ராஜபக்ஷ அல்லது பொதுவாக எஸ்.எல்.பி.பி. வேட்பாளர்” என்று கேட்கப்படுகிறார்கள்.




"வாக்காளர் தீர்மானத்தின் சமீபத்திய போக்குகள், முன்னாள் கோட்டாபய ராஜபக்ச வாக்காளர்களின் ஆதரவை சஜித் பிரேமதாச பெற தவறிவிட்டதை தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றன. ஏப்ரல் 2023 நிலவரப்படி, முன்னாள் ராஜபக்ச வாக்காளர்களில் ஐவரில் ஒருவர் மட்டுமே மற்ற சாத்தியமான வேட்பாளர்களை விட சஜித் பிரேமதாசாவை விரும்பினார். முன்னாள் ராஜபக்ச வாக்காளர்கள் பெரும்பாலும் அ கு திஸநாயக மற்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு மாறியுள்ளனர், மேலும் சமீபத்திய மாதங்களில் வாக்காளர்கள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாறுவது ஆதரவில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களுக்கு பெரிதும் காரணம் ஆகும்." என்று SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மற்றும் IHPன் நிர்வாகப் பணிப்பாளருமான வைத்தியர் ரன்னன்-எலிய கருத்து தெரிவித்தார்.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, April 2023, "IHP Presidential Election Voting Intentions Update March 2023: AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in Presidential Election voter preferences" *Available at:* https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202309.pdf


### IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிட, multiple imputation என்னும் தரவு கணிப்புமுறையை பயன்படுத்துவதோடு, குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது. இம்பியூடேஷன் (Imputation) என்பது தவறிய, தவறான அல்லது சீரற்ற தரவுகளுக்கு மாற்று மதிப்புகளை ஒதுக்கப் பயன்படும் செயல்முறையாகும்.

2023 ஏப்ரல் மாததிற்கான MRP மதிப்பீடுகள் ஏப்ரல் 2023 ல் நடத்தப்பட்ட 580 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021 - மே 19 2023 வரை நடத்தப்ட்ட 11,368 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. பிழை விளிம்பு அ. கு. திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு 4–5% என்றும் மற்ற இரண்டு உத்தேச வேட்பாளர்களுக்கும் 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.


## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம் (The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.